DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: S.T.C. No.20/2023 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

------------------------------------------------------------------------

| | | |
|---|---|---|
| Name | : | திரு,குமரன் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | த/பெ.முனியாண்டி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1, A3 died A2.A4 present.)
Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 15.12.2025

---

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கற்காத்தகுடியில் வசித்து வருகிறேன். விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளையும் எதிரி சின்னபொண்ணு, உமாமகேஸ்வரி ஆகியவர்களையும் எனக்கு தெரியும், எனது உறவினர்கள் தான், சுமார் 2 வருடங்களுக்கு முன்பு தேதி மாதம் நினைவில் இல்லை, எனக்கும் வழக்கின் எதிரிகளுக்கும் எனது வீட்டின் அருகே வைத்து லேசாக வாய் தகராறு ஏற்பட்டது அதனால் நாங்கள் அனைவரும் காவல்நிலையம் சென்று அங்கு பேசி சமசரமாக

முடித்துக் கொண்டோம். காவல்நிலையம் சென்ற போது போலிசார் என்னிடம் எழுதாத வெள்ளை தாளில் கையொப்பம் பெற்றனர். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அது அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. போலிசார் எதற்காக கையொப்பம் கேட்டனர் என்று எனக்கு தெரியாது. எனக்கும் வழக்கின் எதிரிகளுக்கும் ஏற்பட்டது லேசான வாய் தகராறு தான் எனக்கு எதிரிகள் தாக்கி காயம் எதுவும் ஏற்படவில்லை நான் மருத்துவமனையில் அனுமதிக்கப்படவும் இல்லை. வழக்கு குறித்து வேறு எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர் இல்லாததால் குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)

Taken down by me/before me in
open court,interpreted/read over
to the witness and admitted by the
deponent to be correct.

Sd.-/J.Antony Rishandev,
Judicial Magistrate,
Thiruvadanai.